**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No. 9/2024 |
| Deposition of witness for Prosecution | : | P.W-3 |
| Name | : | கோபி, வயது 19 |
| Father Name/Husband Name | : | சுப்பையா |
| Village | : | ஆவாரம்பட்டி |
| Taluk | : | திண்டுக்கல் |
| Calling | : | செண்டரிங் வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 01st day of March 2024.

**(எதிரி ஆஜர் இல்லை கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது ஆவாரம்பட்டியில் வசித்து செண்டரிங் வேலை செய்கிறேன். எதிரியை தெரியும் வேலை பார்த்த இடத்தில் பழக்கம். அ.சா.1 ம் வேலை பார்த்த இடத்தில் பழக்கம். சுமார் 6 மாதங்களுக்கு முன்னர் இரவு 09.30 மணியளவில் செட்டிக்குறிச்சி, கட்டாலங்குளம் அருகே நாங்கள் வேலை செய்த சைட்டிற்கு முன்னால் நான் 09.00 மணியளவில் தூங்கச் சென்றுவிட்டேன்.
2. அ.சா.1 ம் எதிரியும் மது அருந்திக்கொண்டிருந்தனர். பின்னர் மது பத்தவில்லை என்று மீண்டும் வாங்கி மது அருந்திக்கொண்டிருந்தனர். 09.30 மணியளவில் சத்தம் கேட்டு நான் சென்று பார்த்த போது தங்காபண்டி, அ.சா.1 ஐ எதிரி கம்பியால் தாக்கி காயப்படுத்திதாக என்னிடம் கூறினார்.
3. பின்னர் தங்காபண்டி அ.சா.1 ஐ வண்டியில் ஏற்றி, மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றார். வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1. சம்பவ காலத்தில் நீங்கள் 08.30 மணியளவில் தூங்கிவிட்டீர்கள் என்றால் சரிதான். அதனால் யார் சண்டை போட்டுக்கொண்டார்கள் என்று நேரடியாக உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். தங்காபண்டி, பழனிச்சாமி ஆகியோரும் உள் அறையில் தான் தூங்கிக்கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான்.
2. உங்கள் செட்டிற்கு அருகிலும், வெளியிலும் மின் விளக்குகள் இல்லை என்றால் செட்டிற்கு அருகே லைட் உள்ளது வெளியில்

லைட் இல்லை. செட்டில் இருந்து 200 மீட்டர் தொலைவில் மேற்கே தான் பால வேலை நடந்தது என்றால் சரிதான். பால வேலை நடந்து கொண்டிருந்த இடத்தில் இருந்து மது வாங்க வேண்டும் என்றால் செட்டிக்குறிச்சி ஊருக்கு தான் போக வேண்டும் என்றால் 5 கி.மீ தொலைவில் உள்ளது அங்கு தான் போக வேண்டும்.

3. நீங்களும், மணியும் சொன்ன பிறகு தான் தங்காபண்டி, பழனிச்சாமி ஆகியோருக்கு தெரியும் என்றால் சரியல்ல அவர்கள் சொல்லி தான் எனக்கு தெரியும். அ.சா.1 மதிய நேரம் பால வேலை நடக்கும் போது அங்கு தவறி விழுந்ததால் தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல கம்பியை கொண்டு அடித்ததால் ஏற்பட்டது.
4. அ.சா.1 உங்களுக்கு சித்தப்பா முறை என்பதால் அவருக்கு ஆதரவாக கம்பியால் அடித்ததாக பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. வழக்கின் சாட்சிகளான தங்கபாண்டி, நீங்கள், அ.சா.1 உறவினர்கள் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.